தொகுதி 7] [பகுதி 9

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சித்ரபானு ௵ மார்கழி ௴

DECEMBER 1942

பிரசுர கர்த்தர்கள் :

## தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்

பக்கம்

1. நமது தென்னிந்திய ஆசிரியர் சங்கம் .... .... 209
2. கல்வியும் இளஞ் சாரணீயமும்—V .... .... 214
—K. K. லக்ஷ்மி நாராயணன்—
3. பெற்ருேருக்குப் புத்திமதி .... .... .... 217
4. செய்தித் திரட்டு .... .... .... 218
5. Extracts from Fort St. George Gazette .... 224
6. பத்திராதிபர் குறிப்புகள் .... .... .... 225

## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிருேம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிருேம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினல் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1942 டிசம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 28, 35, 41.
செங்கல்பட்டு—CH. 2, 7, 10, 12, 13, 14, 16, 27, 29, 38, 42.
சித்தூர் — CT. 7.
வட ஆற்காடு — N. A. 11, 18, 20, 30, 42, 53, 62, 63.
தென்னுற்காடு — S. A. 7, 23, 86.
தஞ்சாவூர் — Tan. 19, 30, 31, 35-A, 39, 52, 61, 63, 64, 85, 92, 93, 95.
திருச்சி — Tri. 6, 23-A, 33, 41, 43, 46.
ராமனுதபுரம் — Rd. 17, 22, 46, 47, 48, 61.
மதுரை — Md. 10-A, 15, 16, 24, 40, 43.
திருநெல்வேலி — Tin. 12-A, 14, 16, 20, 21, 27, 31, 60, 62, 84, 85, 86, 87.
சேலம் — S. 6-A, 16, 44, 45, 47, 48, 51, 62, 64.
கோயமுத்தூர் — Co. 1, 16, 18-A, 19, 25, 33, 34, 53, 55.
திருவாங்கூர் — Tra. 5, 6.

குறிப்பு —சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்.

# பாலர் கல்வி

| தொகுதி 7 | 1942 ௵ டிசம்பர் ௴<br>சித்ரபாநு ௵ மார்கழி ௴ | பகுதி 9 |
| --- | --- | --- |

## நமது தென்னிந்திய ஆசிரியர் சங்கம்

அதைப்பற்றி உமக்கு என்ன தெரியும்?

இந்தியாவிலுள்ள ஆரம்ப ஆசிரியர்களுக்குள் நமது மாகாணத்திலேயே தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் அதிகம் என்று கவர்ன்மெண்டு அறிக்கைகளில் காணப்படுகிறது. ஆசிரியர் தொழிலுக்கென்று பிரத்தியேகமான (ட்ரெயினிங்) தேர்ச்சிபெற்றவர்கள் நம் மாகாணத்தில் அதிகம் தான். ஆயினும் இம்மாகாண ஆசிரியர்களில் பெரும்பான்மையோருக்கு தேன் இந்திய ஆசிரியர் சங்கத்தைப்பற்றிய விஷயங்கள் தெரியாமலே இருக்கிறது. சம்பள உயர்வு இல்லை, பஞ்சப்படி கொடுக்கவில்லை, வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள் என்கிற புகார் ஏற்படும் சமயத்தில், ஆசிரியர் சங்கம் என்ன செய்கிறது என்று கூச்சலிடுவதுமாத்திரம் சகஜமாயிருக்கிறது. மற்ற காலங்களில் இச்சங்கத்தைப்பற்றி ஞாபகமே ஆசிரியர்களுக்கு இல்லைபோல் காணப்படுகிறது. நமது சங்கம் அதன் அமைப்பு, அதன் அங்கத்தினர்கள், அதன் சில பொது விதிகள், அதன் வேலைப்பாடுகள் முதலியவைகளைப்பற்றி உமக்கு என்ன தெரியும்?

இச்சங்கத்தின் நோக்கமென்ன?

மாகாணத்தில் கல்வி அபிவிருத்தியை உண்டாக்குவது, இங்குள்ள ஆசிரியர்களின் குறைகளை நீக்கி, அவர்களை ஒன்றுபடுத்துவது, கல்வி முறைகளை ஆராய்ச்சி செய்வது முதலியன இச்சங்கத்தின் நோக்கமாகும். இதுவே, இம்மாகாணத்தின் பிரதமஆசிரியர் சங்கமாகும். இச்சங்கத்தின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையென்ன?

இம்மாகாணத்தில், ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, பல்கலைக் கல்வி, தொழிற் கல்வி, இவைகளில் எல்லாம் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை சற்றேறக்குறைய 1,00,000 ஆகும். அதில் 1935-ம் வருஷத்

25694.
தில் 11000 ஆசிரியர்களே, நமது சங்கத்தில் அங்கத்தினர்களாயிருந்தனர். இவ்வருஷத்திலுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை 12000. 12 சதவிகிதம் — ஆசிரியர்களுக்கு ஒருவரே—சங்கத்தின் அங்கத்தினராவர். வரும ஆண்டில், மற்றைய ஆசிரியர்களேயும் சங்கத்தில் சேரும்படி செய்ய வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

### சங்கத்தில் எவ்வாறு அங்கத்தினர்களாகலாம்?

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலுள்ள ஆசிரியர்களோ அல்லது ஒரு ஊரிலுள்ள ஆசிரியர்களோ ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொள்ளலாம். அச்சங்கத்தை ஜில்லா ஆசிரியர் சங்கத்துடன் இணைத்துக் கொள்ளலாம். ஜில்லா ஆசிரியர் சங்கத்தை தென் இந்திய ஆசிரியர் சங்கத்துடன் இணைத்துக்கொள்ளலாம். இம்முறையிலேதான் பெரும்பான்மையோர் அங்கத்தினர்களாயிருக்கின்றனர்.

ஆரம்ப ஆசிரியர்கள், தங்கள் சங்கங்களே, ஜில்லா ஆசிரியர் சங்கத்துடன் இணைத்துக்கொள்ளலாம். இவ்வாறு இணைத்துக்கொள்ள, கல்வி அதிகாரிகள் அனுமதியளிப்பார்கள். சில காரணங்களே முன்னிட்டு இத்தொடர்பு ஏற்படாவிட்டால், பள்ளிக்கூடச் சங்கத்தை நேரிடையாக தென்னிந்திய சங்கத்துடன் இணைத்துக்கொள்ளலாம். தாலூக்கா யூனியன்களேயும் அம்மாதிரி நேரிடையாகவே இணைத்துக்கொள்ளலாம். இதற்கும் ஏதாவது தடையிருக்குமானல், ஒரு ஆசிரியர் நேர்முகமாகவே சங்கத்தின் அங்கத்தினராகலாம். சங்கங்களின்மூலம் மாகாண சங்கத்தில் அங்கத்தினராயிருப்பவர், சங்க விதிகள்படி கட்டணங்கள் கொடுக்க வேண்டும். சங்கங்கள்மூலம் அங்கத்தினராக முடியாமல் நேர்முகமான அங்கத்தினர் கொடுக்க வேண்டிய வருட சந்தா:—

உயர்தர கலாசாலே, கல்லூரி ஆசிரியர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **B.A.** பட்டம் பெற்றவர் | .... | ரூ. | 1 | 0 | 0 |
| மற்றவர்கள் | .... | ரூ. | 0 | 8 | 0 |
| ஆரம்ப பள்ளிக்கூடங்களில் வேலே பார்ப்பவர் | .... | ரூ. | 0 | 2 | 0 |

இச்சந்தாவை வருஷந்தோறும் ஜுலே மாதத்தில் செலுத்த வேண்டும்.

இச்சந்தா அதிகம் என்று சொல்ல முடியுமா? ஆசிரியர்களால் கொடுக்க முடியாததாயிருக்குமா? ஆசிரியத் தொழிலே மேற்கொள்ளும் ஒவ்வொருவரும், சங்கத்தில் சேருவது இன்றியமையாதது என்று உணர வேண்டும்.

### தென்னிந்திய ஆசிரியர் சங்கம் கல்வி முன்னேற்றத்திற்காகவும், ஆசிரியர்களின் நன்மைக்காகவும் செய்துள்ளது என்ன?

நம் மாகாண கல்வி திட்டத்தை அவ்வப்பொழுது பரிசிலனே செய்து வேண்டிய சீர்திருத்தங்களே, துரைத்தனத்தாரிடம் தெரிவித்

துள்ளது. இச்சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டத்தில் இவ்விஷயங்களை நன்கு ஆலோசித்து, கல்வி சீர்திருத்தத்தில் ஆசிரியர்களின் அபிப்பிராயத்தைப் பொது சமூகத்திற்கும், கல்வி அதிகாரிகளுக்கும் தெரிவித்து வருவதுடன் அச்சீர்திருத்தங்களை அமைக்கும்படி வற்புறுத்தி வருகிறது. ஆசிரியர்கள் சம்பளம், தொழில் புரியும் நிபந்தனைகள், இவை சில வருஷங்களுக்கு முன்பு எவ்வளவு தாழ்வான நிலையில் இருந்தன என்பது ஆசிரியர்களுக்குத் தெரிந்ததே. இச்சங்கத்தினரின் வற்புறுத்தலினாலே சம்பள உயர்வும், சீரான சம்பள திட்டமும், முன்பிருந்ததைக் காட்டிலும்சற்று தாராளமான தொழில் நிபந்தனைகளும் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லலாம். ஆயினும் இவை ஆசிரியர்களுக்குப் பூர்ண திருப்தி கொடுப்பதாகயில்லை. தென்னிந்திய ஆசிரியர் சங்கம் அதை நன்குணர்ந்திருப்பதால் இவ்விஷயத்தை மிகத் தீவிரமாகவே கவனித்து வருகிறது. இப்போர் பீதியினால், பல இடங்களில் ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்படும்படியும், சம்பளக் குறைவு ஏற்படும்படியான நிலையும் ஏற்பட்டது நேயர்களுக்குத் தெரியும். இச்சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக, அந்நிலை தடைப்பட்டது.

வருடந்தோறும், மற்ற சங்கங்களின் உதவியுடன், கல்வி வாரத்தை நடத்தி வருகிறது. இக்கல்வி வாரத்தின் நோக்கம், கல்வி அபிவிருத்தி விஷயமாக பொது மக்களின் கடமையை அவர்களுக்கு அறிவிப்பதேயாகும். பொது ஜன சமூகத்தார் கல்வியின் அவசியத்தையுணர்ந்து, கல்விச்சாலைகளை ஆதரிப்பார்களானால், கல்வி அபிவிருத்தியும் ஆசிரியர் உத்தியோக நிலைமை சீர்படுத்தலும் ஏற்படக்கூடும் என்பது திண்ணம்.

ஆசிரியர்களுக்கென்று துரைத்தனத்தாரால் ஏற்படுத்திய பிராவிடெண்டுபண்டு இச்சங்கத்தின் தீவிர முயற்சியாலேயே என்று மறுத்தலில்லாமலே சொல்லலாம்.

தவிர, ஆசிரியர்கள் தங்கள் நன்மையை பிறருதவியை எதிர் பார்க்காமலே செய்துகொள்ளவேண்டும் என்னும் கொள்கைக் கிணங்கி, இச்சங்கத்தின் சார்பாக சங்கத்தின் அங்கத்தினர்களுக்காக தென் இந்திய ஆசிரியர் சங்க காப்பு நிதி **(The South Indian Teachers' Union Protection Fund)** என்பதை ஸ்தாபனம் செய்து சென்ற 15 ஆண்டுகளாக நடத்தப்படுகிறது. இதில் **Life fund** (ஆயுள் நிதியில்) சுமார் 125000 ரூபாய் சேர்ந்திருக்கிறது. சுமார் 1700 மெம்பர்கள் இருக்கின்றனர்கள். மாதம் ரூபாய் 1 கட்டணம் கட்டுபவர்களுக்கு சுமார் ரூ 360 ஆயுள் தொகையாக கிடைக்கும். இதன் விதிகளை, காரியதரிசியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் ஆயுள் நிதிகளில், **(Life Insurance)** இதுவே மிகக் குறைவான கட்டணமும் அதிக லாபமும் கொண்டது. இதில் 40 வயதுக்குக் குறைந்த எல்லா ஆசிரியர்களும் சேரலாம்.

இது தவிர, தென்னிந்திய ஆசிரியன் **(South Indian Teacher)** பாலர்கல்வி என்னும் இரு மாதாந்திரப் பத்திரிகைகளை இச்சங்கம் பிரசுரித்து வருகிறது. **(South Indian Teacher)** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்படுகிறது. இதன் வருட சந்தா ரூ. 4. பாலர்கல்வி, ஆரம்ப ஆசிரியர்களுக்கென்றே பிரசுரிக்கப்பட்டுவருகிறது. இதன் வருட சந்தா ரூபாய் இரண்டே. காகிதவிலை ஏறியிருக்கும்பொழுதும், ஆரம்ப ஆசிரியர்களுக்கென்பதால் இதன் சந்தாவை அதிகப்படுத்தாமல் இருப்பது கவனிக்கத்தக்கது.

### இச்சங்கத்தின் நிர்வாக முறையென்ன?

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஜில்லா ஆசிரியர் சங்கமும் ஒவ்வொரு பிரதிநிதியை இம்மாகாணச் சங்கத்தின் நிர்வாக சபைக்குத் தேர்ந்தெடுக்கும். அவர்கள் சேர்ந்ததே நிர்வாக சபையாகும்.

தவிர, வருடாந்திரக் கூட்டத்தில், தலைவர், காரியதரிசி, கூட்டு காரியதரிசி, பொக்கிஷதார் ஆகிய நால்வர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களும், ஜில்லா சங்கப் பிரதிநிதிகளும், மாதாந்திரப் பத்திரிகைகள் காரியதரிசி, காப்புநிதி காரியதரிசி இவர்களடங்கியதே நிர்வாக சபையாகும். இச்சபையே எல்லாக் காரியங்களையும் கவனித்து வரும். ஆனால் சாதாரண விஷயங்களை அடிக்கடி கூடி கவனிக்க, இச்சபை ஒரு காரியக்கமிட்டியைத் தேர்ந்தெடுக்கும். தவிர, வருஷாந்திரக்கூட்டத்தில், இச்சங்கத்தின் கண்காணிப்பு கமிட்டி **(Vigilance)** யின் அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுப்பார்கள். இக்கமிட்டியின் முக்கிய வேலை, ஆசிரியர்களுக்கு உத்தியோகமுறையில் ஏற்படும் பல தொல்லைகளையும், சிக்கல்களையும் பரிசிலனைசெய்து, ஆசிரியர்களின் நலனுக்கு வேண்டிய உபாயத்தைத் தேடுவதேயாம்.

### தாங்கள் இச்சங்கத்தின் சார்பாகச் செய்யக் கூடியதென்ன?

1. சங்கத்தின் அங்கத்தினராக உடனே சேர்ந்துகொண்டு உம்முடன் வேலைபார்க்கும் மற்ற ஆசிரியர்களையும் சங்கத்தில் சேரும்படி செய்யவும்.

2. உங்கள் ஊரிலுள்ள ஆசிரியர் சங்கத்தை ஜில்லா ஆசியர் சங்கத்துடன் இணைக்கவேண்டிய முயற்சியெடுத்துக்கொள்ளவும். ஊரில் ஆசிரியர் சங்கம் இல்லாவிட்டால் ஒன்று ஏற்படுத்தவும். அனேகமாக எல்லா ஜில்லா ஆசிரியர் சங்கங்களும் **S. I. T. U** தென் இந்திய ஆசிரியர் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

3. சங்க நிர்வாகத்தில் ஊர்ந்த கவனம் செலுத்தவேண்டும். ஊர் சங்க காரியங்களிலும், ஜில்லா சங்க காரியங்களிலும் ஊக்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். ஜில்லா சங்கத்தினின்று **S. I. T. U.** நிர்வாக

சபைக்கு பிரதிநிதி தேர்ந்தெடுப்பதில், நல்ல தேர்ச்சிபெற்றவர்களை அனுப்ப முயலவேண்டும்.

4. வருடாந்திரக் கூட்டத்திற்குத் தவராமல் வரவேண்டும்.

5. 40 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாகயிருந்தால் S. I. T. U. காப்பு நிதியில் சேரவேண்டும்.

6. சங்கத்தினால் வெளியிடப்படும் மாதாந்திரப் பத்திரிகைகளை படியுங்கள். உங்களுக்கு எம்மாதிரியான கட்டுரைகள் வேணும் என்பதை பத்திரிகை காரியதரிசிக்கு எழுதுங்கள். தவிர, உங்கள் உத்தியோக முறையில் என்ன உதவி வேண்டுமானாலும் எழுதிக்கொள்ளலாம். சென்னைக்கு வரும்பொழுது, திருவல்லிக்கேணி ஹைரோடு 520 நம்பரிலுள்ள சங்க காரியாலயத்துக்கு வாருங்கள்.

7. தனிப்பட்ட அங்கத்தினராயிருந்தால் வருடந்தோறும் ஜூலை மாதம் உங்கள் சங்கக் கட்டணத்தைச் செலுத்திவிடுங்கள். ஊர் சங்கமூலமாக நீங்கள் அங்கத்தினராயிருந்தால், அச்சங்கம் செலுத்த வேண்டிய கட்டணத்தை ஜூலை மாதத்தில் கட்டும்படி வற்புறுத்துங்கள். இம்மாகாணத்திலுள்ள ஆசிரியர்கள் பலரும் சங்கத்தில் சேர்ந்துவிட்டால் ஆசிரியர்களுக்கும் பெரும் பலமும், கண்யமும், மரியாதையும் கிடைக்கும். நாம் இந்நாட்டுக் குழந்தைகளுக்கு புரியும் சேவை அவர்களுக்கு நன்மை யளிக்கும். எல்லோரும் சேர்வீர்களாக !


மாணவர்களே! வாலிபர்களே !!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

**சுவாமி விவேகாநந்தர்**

**ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.**

★

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ | விவேகாநந்த | சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, | ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, | ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, | ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, | ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

# கல்வியும் இளஞ் சாரணீயமும் - V

K. K. Lakshminarayanan, (*Saidapet*)

(தொகுதி 5. 314-ம் பக்கத் தொடர்ச்சி)

குருளையர் இயக்கம் துவக்கியபின் வகுப்புகள் நடத்தும் விதம் :—முன்பு பாலர் கல்வி இதழ்களில் எழுதிவந்தது சாதாரணமாக குருளையர் இயக்கத்தின் முக்கியமும், சில பாட்டுகள், பொதுவாக உள்ள விதிகள், சிங்கக்குட்டி ஆசிரியர் இருக்கவேண்டிய முறை, தலைவன் தேர்ந்தெடுப்பது, குருளையரின் பரீக்ஷை, குருளையர் இயக்கம் பிரிவுகளைக் காட்டும் குறிப்பு, முதலியன ஞாபகமிருக்கலாம். இவைகள் சரிவரத் தெரிந்தபின்னரே "குருளையர் இயக்கம்" வெற்றிபெற நடத்த துவக்கமுடியும். குருளையர் வகுப்புகள் வாரத்துக்கு ஒரு முறை ஆரம்பத்தில் நடத்தி இதில் ஊக்கத்தை உண்டாக்கிய பின் வாரம் இரண்டு முறை வகுப்புகள் நடத்தலாம். ஆனால் வாரம் இருமுறை என்றால் சில பேர் பாடம் கெட்டுவிடும். ஏற்கெனவே பெற்றோர்கள் சிலர் தங்கள் பையன் தாலுகாவிளையாட்டுப் போட்டிக்கோ, சாரணீயத்துக்கோ, செஞ்சிலுவைச் சங்கத்தில் சேரவோ, பெயர் கொடுத்தேன் என்று வீட்டில் சொன்னவுடனே அவர்கள் வகுப்பு உபாத்தியாயரிடம் வந்து பையன் படிப்பு கெட்டுவிடும், பெயரை அடித்துவிடும் என்பார்கள். ஆகையால் வகுப்பு வாரம் இரு முறை வைத்துக்கொண்டாலும், காலவரையறையை அதிகமாக்காமல், ஒரு மணி நேரம் வைத்துக்கொண்டு சரியாக குறித்த காலத்தில் முடித்து அனுப்பினால் காலத்தின் மதிப்பும் பையனுக்குத் தெரியும்.

ஆஜர் சங்கியை எடுப்பது :—வகுப்பு ஆரம்பம் 5 மணி என்றால் பிள்ளைகளைச் சரியாக 5 நிமிஷம் முன்னாடியாக வரச் சொல்லிச் சரியாக 5 மணிக்கெல்லாம் ஆஜர் சங்கியை எடுக்கவேண்டும். கொஞ்ச நேரம் காலம் தாழ்ந்து **(Late)** வந்தாலும் அவனை ஆஜர் போடக்கூடாது. அதற்காகப் பிள்ளைகளையும் கோபிக்கவும், அடிக்கவும், கூடாது. அப்படிச் செய்தால் ஊக்கம் குறைந்து நம் இயக்கத்தின் எண்ணிக்கை நாளுக்கு நாள் "வளர் பிறை" போல் இருப்பதற்குப் பதிலாக "தேய் பிறை" போல் ஆவது நிச்சயம். ஆகையால் குறித்த நேரத்தில வருபவர்களுக்கு "**Punctuality prize**" வைத்து காலத்தின் அவசியத்தைச் சிறு பிள்ளைகளின் மனதில் பதியவைத்தால் "**Indian punctuality**" என்ற ஏளனமான பழமொழி போய் உண்மையான அர்த்தத்தில் விளங்கும்,

குருளையர் இயக்கத்தில் வைத்திருக்கவேண்டியவை :—(1) குருளையரின் ஆஜர் பட்டி, (2) குருளையரின் முழு விவரத்தையும் குறிக்கும்

நோட், (3) குருளேயரின் உல்லாஸப் பிரயாண நோட், (4) குருளேயர் இயக்கத்தை மேல் அதிகாரிகள் தணிக்கை செய்து குறிக்கும் நோட், (5) குருளேயர் இயக்கத்தின் காரியங்களேக் குறிக்கும் நோட், (6) குருளேயர் இயக்கம் பாட்டு நோட். (7) குருளேயர் இயக்கம் சம்பந்தமான புத்தகங்கள். (8) குருளேயர் சேமித்து வைத்திருக்கும் பணம் கட்டும் விவரத்தைக் காட்டும் நோட். **(Cub Boy S. B. Book)** (9) படங்கள் ஒட்டும் நோட். (10) பொருள் சேகரிக்கும் பெட்டியாவது **(or)** அலமாரி. (11) மண் வெட்டி, பூவாளி, முதலியன. (12) சாரணீயத்தின் கொடி.

**கண் காட்சிச் சாலேக்கு வேண்டியதை அடைவது** :—சிறுர்களேப் பார்த்து பல தினுசு விரைகள் சேகரிக்க நாளேக்குக் கிடைத்தால் காலியாயுள்ள தீப்பெட்டிகளேச் கொண்டுவாருங்கள் என்று சொல்லிவிட்டால் போதும். மறு நாள் காலே வகுப்பில் முப்பது பிள்ளேகள் இருந்தாலும், குறைந்தது நாற்பதாவது வந்துவிடும். ஆகையால் முயற்சி எடுத்துக் கொண்டால் எல்லாம் முடியும். நாம் பிள்ளேகளேக்கொண்டே பல தினுசான படங்களேயும், விதைகளேயும், கற்களேயும், கூண்டுகளேயும், (பக்ஷி), ஸ்டாம்புகளேயும், நாணயங்களேயும், இலேகளேயும், பறவைகளின் இறகுகளேயும், முதலியனவைகளேயும், கொண்டுவரச் சொல்லிப் பின் நாம் அதைச் சரிவர பாகுபாடு செய்து, அதாவது பக்ஷிகள் படம், கட்டடங்கள் படம், இயற்கை விநோதப் படம், கோவில் படம், என்பன போல் பிரித்து ஒட்டிப்பொருள்களேயும் அதைப்போல் பாகுபாடு செய்து பொருட் காட்சிச்சாலே ஒன்று ஏற்பாடு செய்து அதற்கு "குருளேயர் இயக்கப் பொருட் காட்சிச்சாலே" என்று பெயர் வைத்தால் பிள்ளேகளுக்கும் உற்சாகம் ஊட்டும் மற்றப் பள்ளிக்கூடப் பாடங்களுக்கும் இதை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்,

**குருளேயர் தோட்டம்** :—பள்ளியில் குருளேயர் இயக்கத்துக்காக தனியாக சிலபாத்திகள் ஏற்படுத்தி, அதை குருளேயர்களின் பொறுப்பில் விட்டால், அதில் சிறிய புஷ்பச் செடிகள் (உதாரணமாக காசித் தும்பை, ஜினியா, சூரியகாந்தி, பத்திராக்ஷி, மல்லி, ரோஜா, இன்னும் சில பல நிறங்கள் உள்ள செடியாகப் பயிரிட்டால் சமீபத்தில் "கல்கி"யில் "ராஜாஜி" எழுதியதொருப் "பிருந்தாவனம்" போல் குழந்தைகள் தோட்ட வேலேயில் ஊக்கம் கொண்டு வேலே செய்யும். இதனுல் பின் இயற்கைப் பாடத்துக்கு வேண்டிய உற்று நோக்கும் சக்தி முதலியன உண்டாக வழியுண்டு,

**மாதிரி வகுப்பின் நிகழ்ச்சி நிரல்** :—(1) கடவுள் துதி. (2) ஆஜர் எடுத்தல். (3) நகம், துணி, தலே, முதலியன சுத்தம் பரிசோதித்தல். (4) குருளேயரின் வட்டம் சோதனே. (5) ஏதாவது ஒரு வீரன் **(or)** மகான் கதை. (6) குருளேயருக்கு இயக்கம் சம்பந்தமான விஷயம் **(or)** பாட்டு. (7) அடுத்த கூட்டம், தேதி, மணி, நோக்கம் சொல்லல்,

(8) தோட்ட வேலை. (9) விளையாட்டு. (8, 9-ல் ஏதாவது ஒன்றை மாற்றி மாற்றி வைக்கவும்). (10) தேச வாழ்த்துப் பாட்டு.

குறிப்பு:—"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்" என்பதாலும் சிறிய பிள்ளைகளாக இருப்பதாலும், அதிக படம் வைத்திருந்தால் ஊக்கம் குன்றுவது நிஜம். ஆகையால் வருஷம் ஒன்றில் முடிக்க வேண்டும். படமும் நீதி பொருளாக இருக்கவேண்டும். சுவரொட்டியில் பிள்ளைகளுக்கு மஹான்களின் கதைகளையும், வீரர்களின் கதைகளையும் சொல்லிவந்தால் இப்பொழுது தாய்ப்பிடம் விடாப்பிடியாகுறும் சிறு பிள்ளையே நாளைய எதிர்கால தேசமணியாகத் திகழ்வான். தவிர, பிள்ளைகளுக்கு என்னுடையது என்று இல்லாமல் நமது என்ற பரந்த நோக்கத்தை உண்டாக்கிவைத்தால் பின்னால் சுயநலம் பாராமல் நமது ஊர், நமது நாடு, என்ற உண்மை உணர்ச்சி அவன் உள்ளத்தில் ததும்ப நாம் செய்யும் தொண்டு.

குருளையர் இயக்கம் அறை:—பள்ளியில் ஒரு அறை குருளையர் இயக்கம் சம்பந்தமாக இருக்க ஒதுக்கிவைத்து அதில் குருளையருக்கு உதவும்படியான படங்களும், மற்றும் (1) குருளையன் முழு உடுப்புடன் நிற்பது. (2) குருளையன் வணக்கம் செய்வது. (3) குருளையனுக்கு வேண்டிய குறிப்புகள். (4) விதிகள், சட்டம் முதலியன எழுதிய அட்டைகள். (5) குருளையர்களின் தேவைக்கு வேண்டிய முடிச்சுகள் (Knots) காட்டும் படங்கள். (6) இயக்கத்தின் சின்னம் படம். (7) தவிர அறையின் நாலா பக்கங்களிலும் சிறு பிள்ளைகளின் மனதில் பதியும்படியான பழமொழிகள் உதாரணமாக:—"அன்பே தெய்வம்" "பரோபகாரம் செய்", "ஜீவகாருண்யம் செய்" வீரர்களின் படம், மஹான்களின் படம், முதலிய இருந்தால் எப்படி "இளம் பிராயத்தில் குத்தின பச்சை ஆயுள் காலம்வரை" இருக்குமோ அதைப்போல அவர்கள் நல்ல எண்ணம் அடையவும் பெரிய எண்ணங்கள் தோன்றவும் மார்க்கமுண்டு. அவர்களால் செய்ய முடிந்தவரை அட்டையாலோ, களிமண்ணாலோ, நூலாலோ, செய்ததை வாங்கிவைத்தால், அவர்கள் இன்னும் ஆவலுடன் செய்வார்கள். ஆனால் முதலில் இவைகளெல்லாம் படித்து நடக்காத காரியம் எழுதுவது சுலபம் என்று நினைக்கலாம். நடத்தையில் கஷ்டம் போல் தோன்றுமே தவிர "மனமிருந்தால் மார்க்கமுண்டு" என்பது போல் முடியும். என் பள்ளியில் நான் கண்ட அநுபவத்தையேதான் எழுதுகிறேன். காலம் மாற மாற நாமும் குழந்தைகளுக்காக மாறிக் கொண்டும், பழம் பசலியாக இராமல் இருந்தால்தான் குழந்தை உலகத்தில் நமக்கு இன்பம் கிட்டும் என்பது தெரிந்த விஷயம்.

[தொடரும்]

# பெற்றோருக்குப் புத்திமதி

குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு அவசரமாகப் புறப்படவோ, அல்லது ஓடிப்போகவோ வேண்டிய அவசியம் இராத வரையில் உங்கள் காலை, மத்தியான சாப்பாட்டு நேரங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

அவர்களைத் தினந்தோறும் பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகவும் சரியான நேரத்திலும் போகப் பண்ணுங்கள். அற்ப விஷயங்களுக்காக எல்லாம் அவர்களை வீட்டிலே நிறுத்திக் கொள்ளாதீர்கள்.

அவர்கள் உடுப்பு காலநிலைக்குப் பொருத்தமாகவும், சுத்தமாகவும் இருக்கிறதா என்று கவனியுங்கள்.

பதினைந்து வயதுக்குக் கீழ்பட்ட குழந்தைகள் தினம் குறைந்தது பத்து மணி நேரமாவது தூங்கவேண்டும்.

குழந்தைகள் வீட்டிலே எவ்வளவு நேரம் படிக்கவேண்டும் என்று அவர்களுடைய ஆசிரியரைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, அவர்கள் அப்படிப் படிக்கிறார்களா என்று பாருங்கள்.

அவர்களுக்குப் படிப்பதற்காக, வீட்டிலே ஒரு அறையை ஒதுக்கிக் கொள்ளுங்கள். அது அமைதியும் நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ளதாக இருக்கவேண்டும். அவர்கள் படித்துக் கொண்டிருக்கிற போது அடிக்கடி "இதைச் செய்," "அதைச் செய்" என்று வேலை ஏவி, அவர்களுடைய கவனத்தைச் சிதைக்காதீர்கள்.

ஒரு நாளும் குழந்தைகளுக்குக் கேட்கும்படி அவர்களுடைய ஆசிரியர்களைப் பற்றியோ அல்லது பள்ளிக்கூடத்தைப் பற்றியோ குறை சொல்லாதீர்கள். குழந்தைகள் ஆசிரியர்கள் மீது ஏதேனும் பிராது சொன்னால், அதை நம்பி, அவர்கள் முன்னிலையிலேயே ஆசிரியர்களைத் திட்ட ஆரம்பித்து விடாதீர்கள். ஆசிரியர்களிடம் போய், அவர்கள் கட்சியையும் கேளுங்கள்.

குழந்தைகள் சிறு வயதிலிருந்தே அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியவும் மரியாதை செலுத்தவும் தக்கதாக அவர்களைப் பயிற்றுவியுங்கள்.

இளங் குழந்தைகளிடம் பள்ளிக்கூடத்தைப் பற்றிப் பேசும் போதெல்லாம், அவர்களுக்கு அது ஒரு நல்ல, சந்தோஷமான இடம் என்று எண்ணந் தோன்றும்படி பேசுங்கள். குறும்பு செய்கிற குழந்தைகளைப் பார்த்து, "இரு, இரு. அடுத்த வருஷம் உன்னைப் பள்ளிக்கூடத்திலே போடுகிறேன், பாரு" என்று பயம் காட்டாதேயுங்கள். இதனால் அவர்கள் மனதிலே பள்ளிக்கூடத்தைப் பற்றித் தவறான எண்ணங்கள் விழுந்துவிடும். பிறகு அவைகளை அகற்றுவது கஷ்டம்.

பள்ளிக்கூடம் குழந்தைகளுக்குப் போலவே பெற்றோருக்கும் எல்லையற்ற வாய்ப்புகளைத் தருகிறது. அவற்றைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும்.

பள்ளிக்கூடத்தில் மற்றப் பெற்றோர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள். அங்கே ஒரு பெற்றோர்—ஆசிரியர் சங்கம் இருந்தால், அதிலே சேருங்கள். அப்படி ஒன்று இல்லாவிட்டால் ஏன் ஒன்றை அமைக்கக்கூடாது? அறிவுள்ள ஒத்துழைப்பால் எல்லாருக்கும் நன்மை.

(நல்வழி)

# செய்தித் திரட்டு

---

## ஸ்ரீ சாரதா பாடசாலை மாம்பலம்

(a). பஜன சங்கம் :—13—11—42-ல் ஸ்கந்த ஷஷ்டியை முன்னிட்டு விசேஷ பஜனையும் ஸம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீ பைரவசுந்தர சாஸ்திரிகளால் ஸ்கந்த மகாத்மிய உபந்நியாஸமும் நடைபெற்றன.

(b) பாஷா அபிவிருத்தி சங்கம்.—18—11—42-ல் ஸீனியர் ஜூனியர் மாணவர்கள் சேர்ந்து 'நான் பெரியவனானால்' என்ற விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள்—பின்பு விகடக் கச்சேரி ஒன்று நடைபெற்றது. அதற்குப் பிறகு பள்ளியில் 7-வது வகுப்பை சாசுவதமாக சர்க்கார் அங்கீகாரம் செய்ததைக் குறித்து மானேஜ்மெண்டார் ஓர் இனிய விருந்து நடத்தினார்கள்.

(c) 26—11—42-ல் 6-வது, 7-வது வகுப்பு மாணவ மாணவிகள் தங்கள் ஆசிரியர்களுடன் மியூசியத்திற்கு உல்லாசப் பிரயாணம் சென்று பல விஷயங்களை நேரில் கண்டறிந்து வந்தார்கள்.

(d) 6—12—42-ல் பெற்றோர் தினம், ஸைதாப்பேட்டை ரேஞ்சு ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. வி. ராமசந்திர அய்யர் அவர்கள் தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தீர்மானங்கள் :— 1. இப்பள்ளிக்கூட போஷகராயிருந்த ராவ் சாயிப் சுந்தரேசய்யரின் அகால மரணத்திற்கு அனுதாபம். (2) அடுத்த ஜூன் மாதத்திற்குள் இப்பள்ளிக்கூடத்தை (Middle School) ஆக மாற்ற மானேஜ்மெண்டைக் கேட்டுக்கொண்டனர். பின்பு ஒரு கதம்பக் கச்சேரி நடைபெற்றது. பிறகு ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. வெங்கடசுப்ரமணிய அய்யர் அவர்கள் 'பெண் கல்வி' என்னும் விஷயம்பற்றிப் பேசினார்.

---

## போர்டு பாடசாலை, நேசப்பாக்கம்

30—11—42-ல் இப்பாடசாலையின் 'இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்' ஆரம்பிக்கப்பட்டது. ஸைதாப்பேட்டை ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர ஸ்ரீ. ராமச்சந்திர அய்யர் தலைமை வகித்து இச்சங்கத்தின் நோக்கத்தை விவரித்துக் கூறினார்.

---

## போர்டு ஆண்பாடசாலை, ஒதியத்தூர்

25—11—42-ல் பெற்றோர் தினம், ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ ரத்தின சபாபதி முதலியார் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அப்பொழுது கண்டாச்சிபுரம் போர்டு பாடசாலை ஆசிரியர்களில் ஸ்ரீ. கிருஷ்ணசுவாமி அய்யரால் 'தற்கால ஆரம்ப பாடசாலைகள்' என்பதைப் பற்றியும், ஸ்ரீ. ராஜகோபாலய்யரால் 'சமூக வாழ்க்கையும் ஆரம்ப பாடசாலையும்' என்பதுபற்றியும், கிடார் போர்டு

பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ. ஆரோக்கியசாமி நாயகரால் 'பாடசாலையும் பெற்றோர்களும்' என்பதுபற்றியும் இனிய சொற்பொழிவுகளாற்றப் பட்டன பிறகு மாணவர்களால் 'கம்பரும் சிலம்பும்' 'பக்த பிரக்லாதா' என்ற நாடகங்கள் நடத்திக் காண்பிக்கப்பட்டன.

---

## இந்து மத பாடசாலை, வாலாஜாபாத்

23—11—42-ல் இப்பாடசாலைக் காப்பளராய் இருந்து காலஞ் சென்ற பஞ்சாட்சர முதலியாரின் முதல் ஆண்டு நினைவுதினத்தன்று தலைமை ஆசிரியர் ஸ்ரீ. ராஜகோபாச்சாரியார் தலைமையில் கூட்டங்கூடி பலர் ஷை யாரின் பண்புகளைப்பற்றி எடுத்துப் பேசினார்கள்.

---

## எய்டெட் எலிமெண்டரி பாடசாலை, சூளேஸ்வரன்பட்டி

29—11—42-ல் பொள்ளாச்சி முனிசிபல் உயர்தரபாடசாலை ஆசிரியர் ஸ்ரீ. வெங்கிடுசுப்பு பிள்ளை அவர்களின் தலைமையில் பெற்றோர் சங்கம் கூடிற்று. பொள்ளாச்சி முனிசிபல் பாடசாலை தமிழாசிரியர் ஸ்ரீ. பொன்னுசாமி கவுண்டர் கம்ப ராமாயணத்தைப்பற்றியும், இப் பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி அய்யர் 'பாடசாலைக் கல்வியும் பெற்றோர் ஒத்துழைப்பும்' என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள்.

---

## உடுமலைப்பேட்டை தாலுகா போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், கொமரலிங்கம்

23—11—42-ல் ஆசிரியர்கள் ஒன்றுகூடி ஷை சங்கம் ஒன்று நிறுவத்தீர்மானித்து ஜில்லா போர்டு அனுமதி பெறவும், மற்ற அலுவல்களைக் கவனிக்கவும் தற்காலிக காரியதரிசியாக கொமரலிங்கம் போர்டு பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ. கே. ஆர். சுந்தரம் நியமிக்கப்பட்டார்.

---

## நிலக்கோட்டை தாலுகா ஆரம்ப ஆசிரியர் யூனியன், அம்மையநாயக்கனூர்

29—11—42-ல் இந்த யூனியனின் காரியக்கமிட்டி, யூனியன் தலைவர் ஸ்ரீ அருள்சாமி அவர்களின் தலைமையில் கூடிற்று.

1. ஆரம்ப ஆசிரியர்களுக்கு பஞ்சப்படி கொடுத்துதவியதற்காக ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீஸர் அவர்களுக்கு நன்றிபாராட்டியும், . சாதல்வார் தொகைகளை நிறுத்திவிட்டு, ஸ்டேஷனரியையும் போஸ் டேஜையும் போர்டிலிருந்தே சப்ளை செய்யும்படியும், 3. சம்பள உயர்வு ஸாங்க்ஷன் செய்திருக்கும் ஆசிரியர்களுக்கு அதை சீக்கிரம் கிடைக்கும்

படி செய்ய வேண்டியும், 4. கிருஸ்துமஸ் ரஜாவை ஜனவரி 4-ந் தேதி வரை நீடித்து வைக்கும்படிக்கும், 5. தலைமை ஆசிரியர்களுக்கு அதிகப் பொறுப்பை உத்தேசித்து டிபூடி அலவன்ஸ் கொடுத்துதவும்படியும், பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## கோடைக்கானல் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம், தாண்டிக்குடி

21—11—42-ல் இச்சங்கம், பூலத்தூர் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. முத்துச்சாமி சேர்வை அவர்கள் தலைமையில் கூடிற்று.

கல்வி வாரக் கொண்டாட்டத்தை நன்கு நடத்த வேண்டி அது விஷயமாக ஜனவரி மாதமீட்டிங்கில் நிர்ணயிக்கவும் கோடைக்கானல் தாலூகா ஆரம்ப ஆசிரியர்களுக்கு மலைப்படியை முன்பு கொடுத்த திட்டப் படி கொடுத்துதவும்படியும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

---

## போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, பாலக்கோடு (சேலம்)

15—11—42-ல் இப்பாடசாலை இளைஞர் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தினர்கள், தலைமை ஆசிரியர் ஸ்ரீ சுந்தரமய்யர் அவர்களின் தலைமையில் சில ஆசிரியர்களுடன் கூட உல்லாசப் பிரயாணம் செய்தனர். 2 மைல் தூரத்திலுள்ள ஏரியில் ஸ்நானம் செய்துவிட்டு, உண்ட பிறகு அருகிலுள்ள மனமோஸ்வரன்மலை மீதேறி அங்குள்ள குகைகள் மூலிகைகள் முதலியவற்றைத் தெரிந்து பறித்துக் கொண்டு சுகாதாரப்பாடல்களுடன் திரும்பினர்.

---

## போர்டு ஹைஸ்யர் எலிமெண்டரி பாடசாலை, ஹரூர். கல்விவாரக் கொண்டாட்டம்

10—11—42-ல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. ரங்கசாமி அய்யங்கார் தலைமையில் உதவி ஆசிரியர் ஸ்ரீ. ஸீதாராமன் 'முதியோர் கல்வி' என்பது பற்றிப் பேசினர்.

11—11—42-ல் கௌரவ மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ. ராஜகோபால முதலியார் தலைமையில் உதவி ஆசிரியர் ஸ்ரீ. விநாயகம் 'பெண் கல்வி' என்ற விஷயம்பற்றிப் பேசினர்.

12—11—42-ல் பெற்றோர் சங்கத்தலைவர் ஸ்ரீ. கோபால் செட்டியார் தலைமையில் உதவி ஆசிரியர் ஸ்ரீ. ஸாலமன் 'கல்வியும் குடிசைத் தொழிலும்' என்பதுபற்றிப் பேசினர்.

தினந்தோறும் மாணவ மாணவிகள், சம்பாஷணை, கும்மி, கோலாட்டம் முதலியவற்றால் வந்தவர்களை மகிழ்வித்தனர்.

## போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, கெங்கவல்லி—கல்விவாரம்

11—11—42-ல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. வரதராஜன் தலைமையில், ஆசிரியர் ஸ்ரீ. வெங்கட்டரங்க அய்யங்கார் 'கல்வியும் தற்கால வேதனையும்' என்பதுபற்றிப்பேசினர்.

12—11—42-ல் பிரபல வியாபாரி ஜனப் அப்துல்கனி சாஹிப் தலைமையில் ஆசிரியர் ஸ்ரீ. ராமசாமி அய்யர் 'குழந்தைகளும் உலகமும்' என்பதுபற்றிப் பேசினர்.

13—11—42-ல் மிருசுதார் ஸ்ரீ. ராமசந்திர அய்யர் தலைமையில் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. வரதராஜன் 'சுகாதாரமும் யுத்தத்துக்குப் பின் கல்வியும்' என்பதுபற்றிப் பேசினர்.

14—11—42-ல் பெற்றோர்கள் கைத்தொழிற் சாலையைப் பார்வையிட்டனர்.

15—11—42-ல் சப்-ரிஜிஸ்தார் ஸ்ரீ. விஸ்வனுதம் தலைமையில் பண்டிட் ஸ்ரீ. சிவப்பிரகாசம் 'பெற்றோர்களும் பாடசாலையும்' என்பது பற்றிப் பேசினர். மாணவமாணவிகள் 'கல்வியின் பெருமை', 'பெண் கல்வியின் அவசியம்' என்ற விஷயங்களை உரையாடினர்கள். தலைமை ஆசிரியர் பொது ஜனங்களுக்கு பாடசாலையின் இட வசதி குறைவைப் பற்றி எடுத்துரைத்தபோது இலவச இட வசதி அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டது.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், பாபிரெட்டிபட்டி

14—11—42-ல் ஆசிரியர் ஸ்ரீ. சேதுமாதவ சாஸ்திரியாரின் தலைமையில் இச்சங்கம் கூடிற்று. அப்பொழுது, கிராம சுகாதாரம், செஞ்சிலுவை சங்கவேலைகள், ஹிந்துஸ்தான் சாரணர் கடமைகள், ரஸ்தா விதிகள், முதலிய விஷயங்களைப்பற்றி சொற்பொழிவுகள் நடந்தன. பிறகு யுத்தப்படி, சாதல்வார்தொகை, கிரேடு சம்பள விஷயமாகத் தீர்மானங்கள் நிறைவேறின.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், பள்ளிபாளையம்

28—11—42 ல் இச்சங்கம், உதவி ஆசிரியர் ஸ்ரீ அகிலாண்டய்யர் தலைமையில் கூடிற்று. ஸ்ரீ வெங்கட்டராமய்யர் தற்கால யுத்தநிலைமையும் ஆசிரியர் கடமையும் என்பதுபற்றியும், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஆராவமுத அய்யங்கார் அவர்கள் 'தமிழுக்குத் தொண்டு' என்பது பற்றியும் விரிவாகப் பேசினர்கள். பாலர்கல்வி முதலிய பத்திரிகைகள் வரவழைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

## ஓமலூர் தாலூகாபோர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், ஜலகண்டபுரம்

22—11—42 ல் யூனியன் தலைவர் ஸ்ரீ கந்தசாமி அவர்கள் தலைமையில் மூன்றாவது மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது தென்னிந்திய ஆசிரியர் சங்கக் கூட்டுக்காரியதரிசி ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார் அவர்கள் விஜயம்செய்து ஆசிரியர்கள் நலன், ஒற்றுமை, முதலிய விஷயங்களைப்பற்றி சொற்பொழிவு செய்தார்கள். மற்றும் சேலம் ஜில்லா ஆசிரியர் கில்டு காரியதரிசி ஸ்ரீ K. S. செங்கல்ராய அய்யர் அவர்களும் ஓமலூர் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் K. N. வைத்யநாதய்யர் அவர்களும் விஜயம் செய்திருந்தனர். பின்பு ஆடோமாடிக் அபராதத்தை ரத்து செய்ததற்காக ஜில்லா போர்டு பிரஸிடெண்டு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளவும், மாகாணக்கல்வி அதிகாரி அவர்களுக்கு 'ஸர்' பட்டம் கிடைத்ததற்குப் பாராட்டியும், யுத்த அலவன்ஸ், சம்பள ஸ்கேல், முதலியன பற்றியும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபின் கூட்டம் இனிது கலைந்தது.

---

## ஆரம்ப ஆசிரியர் யூனியன், நடுக்காவேரி

21—11—42 ல் ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் தலைமையில் இச்சங்கம் கூடிற்று. தலைவர் அவர்கள் உலகபடத்தின் உதவியைக்கொண்டு தற்கால யுத்த போர்முனைகளைப்பற்றி விளக்கமாக எடுத்துக்காட்டினார். கவர்னர் ஜனரல் அவர்களது விசேஷ உத்தரவை அனுசரித்து, பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு மேன்மேலும் வெற்றிபெற்றுச் செழித்தோங்குமாறு தங்கள் வழிபடும் தெய்வத்தை பிரார்த்திக்கும்படி தெரிவித்தார். பிறகு 'கணிதம் போதித்தல்' என்பதுபற்றி விரிவாகப் பேசினார்.

---

## போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், நாங்குனேரி

1—11—42 ல் பொதுச்சபைக் கூட்டத்தில் இதர ஜில்லாபோர்டு ஊழியர்களுக்குப்போல ஆரம்ப ஆசிரியர்களுக்கும் யுத்தப்படி அளிக்க வேண்டுமென்றும் இதுவிஷயமாக ஸ்பெஷல் ஆபீஸரைப் பார்க்க ஒரு தூதுகோஷ்டி செல்வதென்றும், கோஷ்டி செலவை யூனியன் வகிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

## ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், தூத்துக்குடி

21—11—42 ல் இச்சங்கம் கூடி, சர்க்கார் சிப்பந்திகளுக்குப் போலவே ஆரம்ப ஆசிரியர்களுக்கும் யுத்தப்படி கொடுத்துதவும்படி மானேஜ் மெண்டார்களுக்கு பண உதவி செய்யுமாறும், பிராவிடெண்டு பண்டை எல்லா ஆசிரியர்களுக்கும் கட்டாயப்படுத்தும்படியும், பிராவி டெண்டு பண்டிலிருந்து ஆறுமாதச் சம்பளத்தை அட்வான்ஸாகக் கொடுத்து 48 தவணைகளில் வசூல்செய்யவும் டைரெக்டர் துரையவர்கள் உத்திரவிடும்படியும், மண்ணெண்ணையை கட்டுப்பாடில்லாமல் ஆசிரியர் களுக்கு மாதம் ஒருகாலன் வீதம் சப்ளை செய்யும்படியும் தீர்மானங்கள் நிறைவேறின.

---

## முசிரி தாலூகா எய்டெட் ஆரம்ப ஆசிரியர் யூனியன், துறையூர்

2—11—42 ல் யூனியன் தலைவர் ஸ்ரீ ராஜகோபாலய்யர் தலைமை யில் கூடி, யுத்தப்படி கொடுக்கும்படியும், E. S. L. C க்கு ஆங்கிலத் தையும் பரீக்ஷை பாடமாக வைக்கும்படியும், S. S. L. C-யில் தவறிப் போன எலிமெண்டரி கிரேடு உபாத்தியாயர்களை, 4, 5 வகுப்புக்களில் ஆங்கிலம் போதிக்க அனுமதிக்க வேண்டுமென்றும், கட்டிட வசதி குறை வுக்காக உபாத்தியாயர்களைப் பாதிக்கக்கூடிய உபாத்திமைக் கிராண்டைக் குறைக்கக் கூடாதென்றும் சர்க்காரை வேண்டிக்கொள்வதாகத் தீர்மா னிக்கப்பட்டது.

---

## திருச்சி ஆரம்ப ஆசிரியர் சங்கம், 5-வது செண்டர், புத்தூர்

14—11—42-ல் ஜில்லாக் கல்வி அதிகாரி ஸ்ரீ. ராமன் மேனன் அவர்கள் தலைமையில் கூடிற்று. ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. சுப்ரமணியம் அவர்களும் வந்திருந்தார். அவ்வமயம் தலைவர் டவுன் பள்ளிக்கூடங்களில் நூற்றுக்கு நூறு ஆஜர் இருக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பெற்றோர் சங்கம் நிறுவப் படவேண்டு மென்றும் சுகாதார முறைப்படி பாடசாலைகளை அமைக்க வேண்டு மென் றும் சரிவர ஆஜராகாத பள்ளிக்கூடங்களில் ஆஜர் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்றும் விரித்துச் சொன்னார்.

பிறகு ஆசிரியர்கள், ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி பள்ளிகளில் கொடுப்பதுபோல தங்களுக்கும் யுத்தப்படி கொடுத்துதவும்படி கேட்டுக் கொண்டார்கள்.

---

## போர்டு ஆண் பாடசாலை சத்யமங்கலம்—பெற்றோர் சங்கம்

7—12—42-ல் இச்சங்கம் உபதலைவர் ஸ்ரீ. வெங்கட்ரமணையர் தலைமையில் கூடிற்று. பல பெற்றோர்களும் மாணவர்களும் கூடியிருந்த

னர். (1) பாடசாலையில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தவும், (2) பாடசாலையின் இட வசதியை அதிகப்படுத்த பக்கத்திலுள்ள காலி இடத்தை சேர்த்துக் கொள்ளவும், (3) தாழ்வாரங்களில் வெயிலைத் தடுக்க அலகுத் தட்டிகள் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. ஆசிரியர்கள் மாணவர்களின் அறிவிருத்திக்காக எப்படி உழைக்கிறார்கள் என்பதை விளக்கிக் காட்டினர். பெற்றோர் சார்பில் கனவான் ஸ்ரீ. கிருஷ்ண செட்டியார் பேசினார்.

---

## போர்டு பாடசாலை, பெண்ணாடம்

6—12—42-ல் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. கல்யாண சுந்தரம் பிள்ளை அவர்களின் தலைமையில், ஆசிரியர்களும் மாணவர்களும் சில பெற்றோர்களும் சேர்ந்து, மாம்பாக்கம் ஆகாய விமான நிலையத்திற்கு உல்லாசப் பிரயாணம் சென்று வந்தனர். 10 மைல் சுற்றளவுள்ள இந்நிலையத்தைச் சுற்றி வருகையில் அங்குள்ள இந்திய, ஐரோப்பிய ராணுவ விடுதிகளையும் அங்குள்ளவர்களின் உதவியால் விமான நிலையத்தைப் பற்றிய விஷயங்களையும் அறிந்து கொண்டனர்.

---

# EXTRACTS FROM FORT ST. GEORGE GAZETTE (PART I-B.)

---

## Public Examination at the end of VIII standard 1943

*The Tamil Text-Book (for detailed study)*

**Notice**

It is hereby notified that in the Tamil Text-Book prescribed for the Public Examination at the end of VIII Standard, 1943, the story entitled "Dhanapalan" by Sri T. Chelvakesavaroya Mudaliar (Prose lesson 5 on pages 35 to 43 of the book) has been deleted from study for the examination.

(*Gazette page 652 of 20—10—1942*)

---

# பத்திராதிபர் குறிப்பு

## ஆரம்பக்கல்வி யார் பொறுப்பு?

நம்மாகாணத்தில் ஆரம்பக்கல்வி அபிவிருத்தியாவது யாருடைய பொறுப்பு என்ற ப்ரச்னையை தீர ஆலோசிப்பது அவசியமாகும். 1921-ம் வருஷமுதல் ஆரம்பக்கல்வி, மாகாண ஆட்சியைச் சேர்ந்தது என்று நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. அதற்குமுன்பு மத்திய சர்க்காரிடமிருந்து மாகாண சர்க்கார்களுக்கு ஆரம்பக்கல்வியின் சார்பாக உதவி அளிக்கப்பட்டுவந்தது. 1921 சீர்திருத்தப்படி அந்த உதவி நின்றுவிட்டது. எனவே ஆரம்பக்கல்வி மாகாண சர்க்காரின் பொறுப்பு என்பது ஏற்பட்டது. ஆனால் நமது மாகாணத்தில் துரைத்தனத்தார் இப்பொறுப்பை எவ்வாறு வகித்து வருகின்றார்கள்? அவர்களுடைய நேரிடையான நிர்வாகத்தில் ஆரம்பப்பள்ளிக்கூடங்களே இல்லை. துரைத்தனத்தார் ஜில்லா போர்டுகளுக்கும் முனிசிபாலிடிகளுக்கும் இப்பொறுப்பை மாற்றிவிட்டார்கள். அவர்கள் தங்களுடைய பொது வருமானத்திலிருந்து ஒருபகுதி, கல்விவரி, மாகாண சர்க்கார் அளிக்கும் உதவி இவைகளைக்கொண்டு ஆரம்பப் பள்ளிக்கூடங்களை நடத்தி வருகின்றார்கள். எல்லா முனிசிபாலிடிகளும், ஜில்லா போர்டுகளும், கட்டாயக் கல்வி திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. சில ஸ்தல ஸ்தாபனங்களே கட்டாயக்கல்வி திட்டத்தை மேற்கொண்டிருக்கின்றன. அவைகளும் அதைச் சரிவர அமுலுக்குக் கொண்டுவரவில்லை. இதற்கெல்லாம் முக்கிய காரணம் போதுமான பணம் இல்லாததுதான். ஸ்தல ஸ்தாபனங்களின் வருமானம் மிகக் குறைவானதே. கல்வி வரியை அதிகப்படுத்துவது பொதுஜனங்களுக்குக் கஷ்டமுண்டாகும் என்று கருதப்படுகிறது. கல்வி வரியை நிலவரி செலுத்துவோர்களே செலுத்தும்படி இருப்பதால் அவர்களுக்கு வரிச் சுமை அதிகமாகிறது என்பது கவனிக்கத்தக்கது. துரைத்தனத்தாரே, 1921-ம் ௵ ஆரம்பக்கல்வி மசோதாவில் ஏற்பட்ட திட்டப்படி உதவி அளிக்க மறுக்கிறார்கள். இம்மசோதாவில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. கல்வி அபிவிருத்திக்கு எவ்வாறு தடை ஏற்படும் என்பதை சற்றும் யோசியாமல், பணநெருக்கடி காலத்தில் ஆரம்பக் கல்விச் சட்டத்தின் பண உதவி ஷரத்துக்களில் பல சீர்திருத்தங்கள் இயற்றப்பட்டன. ஆனால் வியாபார வரி, புகையிலை வரிபோன்ற நல்ல வருமானம் தரும் வரிகளை இயற்றி, அதனால் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக வருமானம் பெறும் இக்காலத்திலும், நெருக்கடியை சமாளிக்க ஏற்படுத்திய திட்டத்தையே உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு, உதவியளிக்க மறுப்பது நாட்டின் நன்மையைச் சிறிதும் கருதாதவர் செயலாகும். கல்வி அபிவிருத்தி, நாட்டின் முன்னேற்றம், இவ்விஷயங்களில் துரைத்தனத்தாரின் பொக்கிஷ இலாகாவில் பரந்த நோக்கம் இல்லாததாலே இந்நிலை ஏற்பட்டு, ஸ்தல ஸ்தாபனங்கள் கல்வி அபிவிருத்தி உண்டுபண்ண முடியாமல் தவிக்கின்றனர்.

ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்படுவதற்குமுன்பு, துரைத்தனத்தாருக்கு குறைந்த செலவிலும் அதிக பொறுப்பில்லாததுமான முறையாகிய உதவி பெறும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபனம் செய்யப்பட்டன. இவைகளுக்கு

உதவியளிக்கும் முறை பல மாறுதல்களடைந்து, இப்பொழுது கடைசியாக ஆசிரியர் ஒருவருக்கு இவ்வளவு ரூபாய் என்ற திட்டத்தில் உதவியளிக்கப்படுகின்றது. இது, சமீபகாலத்தில் ரூ. 2 அதிகப்படுத்தின போதிலும் மிகக் குறைவானதேயென்று துரைத்தனத்தாரே ஒப்புக்கொள்கின்றனர். இந்த உதவியை இன்னும் அதிகப்படுத்துவதின் அவசியத்தை எல்லோரும் உணர்ந்துள்ளார்கள். ஆயினும் பணம் அதிகம் ஆகிவிடுமே, 2 கோடி ரூபாய்க்குமேலா மாகாண சர்க்கார் ஆரம்பக் கல்விக்குச் செலவிடுவது என்று கருதுகிறார்கள்போலும். நாட்டின் எழுத்தறிவில்லாமையை ஒழித்தால்தான் நாடு முன்னேற்றமடையும். அப்பொழுதுதான் நாட்டின் பொருளாதார நிலைமையும் செல்வமும் அதிகரிக்கும். எனவே, ஆரம்பக்கல்வி விஷயத்தில் சிக்கனம் செய்வது தற்கொலை செய்து கொள்வதுபோலாகும். இதை நமது துரைத்தனத்தார் உணரும்படிசெய்வது பொதுமக்களின் முக்கிய கடமையாகும். ஸ்தல ஸ்தாபனங்களும், இவ்விஷயத்தை துரைத்தனத்தாருக்கு எடுத்துக்காட்டி ஆரம்பக் கல்விக்குப்போதிய பணம் ஒதுக்கிவைக்கும்படி செய்வது அவர்களுடைய முக்கிய தேசத்தொண்டு ஆகும்.

சென்னை கார்ப்பொரேஷனில் கல்வி வரவுசெலவு திட்டத்தைப் பற்றி விவாதித்தகாலத்தில் கீழ்க்கண்ட அபிப்பிராயங்களை தெரிவித்தது கவனிக்கத்தக்கது.

"ஸ்ரீமான் டி. செங்கல்வராயன் (நகர முனிசிபல் சட்டத்தைக் கண்டித்துப் பேசும்பொழுது) கூறியதாவது :—கார்ப்பரேஷன் கடன் வாங்குவதென்பது மிகவும் மோசமான காரியம். வாத்தியார்கள் சம்பளத்தைக் குறைப்பதற்கு இதுசமயமல்ல. வாத்தியார்களுக்கு யுத்தப்படி கொடுப்பது ஆரம்பக் கல்வியில் எதிர்பாராத செலவே. இச்செலவை பொது பட்ஜட்டிலிருந்துதான் நேர் செய்யவேண்டும். இதற்காக சர்க்கார் கிராண்டு அளிக்கவேண்டியது அவசியமென எனக்குப்படுகிறது.

ஸ்ரீ ஏ. ஆர், வி. ஆச்சார் :—ஆரம்பக் கல்வி விஷயத்தில் கார்ப்பரேஷன் செலவு செய்வதே போல சர்க்காரும் ஏன் செலவு செய்யக் கூடாது ?

ஸ்ரீ வி. சர்க்கரைசெட்டியார், கூறியதாவது :—பாடசாலைவாத்தியார்களின் சம்பளத்தைக் குறைப்பது அழகாயிருக்காது.

யுத்தம் இப்பொழுது நடந்து வருகிறது. அந்த யுத்தத்துக்கு கார்ப்பரேஷனோ அல்லது வாத்தியார்களோ அல்லது பொது ஜனங்களோ பொறுப்பாளிகளல்லர். தற்சமயம் விற்பனை வரியினால் சர்க்காருக்கு ஏராளமான வரும்படி வந்துகொண்டிருக்கிறது. இதிலிருந்து யுத்தப்படி கொடுக்கவும் மற்றும் பல செலவுகளைச் சமாளிக்கவும் சர்க்காரால் ஒரு லட்சம் ரூபா கொடுக்க முடியும்."

இதே போல் மற்ற ஸ்தல ஸ்தாபனங்களும், உதவிபெறும் ஆரம்பப்பள்ளிக்கூட மானேஜர்களும் துரைத்தனத்தார் தமது ஆரம்பக்கல்விக் [illegible] உணரும்படி செய்வது, ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்துக்கு மிகவும் இன்றியமையாதது.